**<u>03.11.2021</u>**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு –E, பிளாக்–1 ந.க.எண்.44/5pt, 6pt மற்றும் 45/5,6–ல் 0.20.18 ஹெக்டேர் பரப்பளவுள்ள இடத்தை முழுமைத்திட்ட பொது மற்றும் பகுதி பொது உபயோக பகுதியிலிருந்து (public and semi public purpose) குடியிருப்பு உபயோக, பகுதியாக நிலப்பயன் மாற்றம் கோரப்பட்ட உத்தேசத்திற்கு உள்ளாட்சி மன்ற தீர்மானம் அனுப்புமாறு நகர் ஊரமைப்புதுறை நாமக்கல் அலுவலக ந.க..எண்.2880/2021/நாமா நாள்.13.10.2021–ம் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மனுதாரர் நிலப்பயன் திரு.தங்கமணி மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பம் அளித்துள்ளார்.எனவே மேற்கண்ட நில உபயோக மாற்றம் குறித்து மன்ற அனுமதி பெற்று நகர் ஊரமைப்புத்துறைக்கு அனுப்ப மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. நகர் ஊரமைப்புத்துறைக்கு நடவடிக்கைக்கு அனுப்ப அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.6871/2021/எப்1)

**பொருள் எண்.2**

2020– 2021–ம் வருடத்திற்கான தீபாவளி பண்டிகைக்கு திருச்செங்கோடு நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதார தூய்மை பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் , சங்கிலியர் மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள் மற்றும் ஓட்டுநர்களுக்கு ஒரு செட் ஷு–வும் வழங்க 01.11.2021 அன்று குறுகியகால விலைவிகிதம் கோரப்பட்டது.திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் SL ( SPL) 170 என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்கண்டவாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது.

**<u>சீருடைகள்</u>**

| ஆண்கள் (துப்புரவு பணியாளர்கள்) | மீட்டர் ஒன்றின் விலை |
|---|---|
| 1). காக்கி, வைள்ளை அரைக்கை சட்டை மற்றும் காக்கி, வெள்ளை முழுக்கால் சட்டை (Full Paint) | ரூ.227.50 |
| 2) .தலைப்பாகை | ரூ.129.80 |
| 3). கருநீலம், காக்கி மற்றும் வெள்ளை பாலியஸ்டர் சேலை | ரூ.580.00 |
| 4). கருநீலம், காக்கி மற்றும் வெள்ளை பாலியஸ்டர் ரவிக்கை துணி | ரூ.110.50 |

**காலணிகள்**

| இனங்கள் | மொத்தம் (1 ஜோடி) |
|---|---|
| ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் காலணிகள் | ரூ.285.00 |
| ஷு (கட் ஷு) | ரூ.384.00 |

மேற்காணும் விலைப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட விலையின் அடிப்படையில் திருச்செங்கோடு நகராட்சியில் சீருடை அணிந்து பணிபுரியும் தகுதியுடைய பணியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள், தலைப்பாகை துண்டு மற்றும் ஷு க்களை திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் SL ( SPL ) 170 என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்காணும் சீருடைகள், காலணிகள் மற்றும் ஷு க்களை திருச்செங்கோடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் SL ( SPL ) 170 கொள்முதல் செய்ய தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 6517/2021/எச்1)

**பொருள் எண்.3**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா – 19 வைரஸ் தொற்று நோய் பரவுதலை தடுக்க பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய 27.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | விநியோகம் கோரும் பொருள் விபரம் | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் (l Lrt & Kg ) | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் (l Lrt & Kg ) |
|---|---|---|---|
| 1. | லைசால் 5 % | ரூ.164.02 | ரூ.166.00 |
| 2. | சேனிடைசர் | ரூ.295.00 | ரூ.298.00 |
| 3. | கையுறை ( உட்புறம் துணி, வெளிப்புறம் ரப்பர்) | ரூ.98.56 | ரூ.102.00 |
| 4. | முகக்கவசம் (துணியாலானது) | ரூ.14.91 | ரூ.16.00 |
| 5. | பினாயில் | ரூ.56.64 | ரூ.58.00 |
| 6. | சுண்ணாம்புத்தூள் | ரூ.11.55 | ரூ.12.20 |
| 7. | பிளீச்சிங் பவுடர் | ரூ.54.28 | ரூ.57.00 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை SDRF நிதியிலிருந்து செலவினம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>(கோப்பு எண்.2211/2020/எச்1)</u>